மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 146 /2024**

பி.வா.சா.1 முனியாண்டி, S/o துரைராஜ்

நாள்: 02.04.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் குடியிருந்து வரும் வீட்டுக்கு தெற்கு பக்கம் வாதிகளின் வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் குடியிருந்து வரும் வீடானது இரண்டு வீடாக உள்ளது என்று சொன்னால் சரிதான். ஒரு வீட்டில் நானும் மற்றொரு வீட்டில் என்னுடைய தகப்பனார் துரைராஜ் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். மேற்படி வீடானது எனது தகப்பனார் வேலம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கிய வீடு என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் வாங்கிய நிலமும் வாதிகள் கிரையம் வாங்கிய நிலமும் மொத்தமாக வேலம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனார் வேலம்மாள் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கிய பட்ட பத்திரத்தில் கண்டுள்ள விஸ்தீரணம் உள்ள சொத்து மட்டும்தான் எங்களுக்கு பாத்தியம் என்று சொன்னால் சரிதான்.

2) பி.வா.சா.1 ஆவணப்படி எனது தகப்பனார் வேலம்மாள் என்பவரிடமிருந்து 1 ¾ சென்ட் நிலத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் பெற்ற பின்பு தான் ஜெயமேரி வேலம்மாள் என்பவரிடமிருந்து 2 சென்ட் நிலத்தை கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரிதான். ஆனால் என்னுடைய தகப்பனார் பெயரில் வருவாய் துறையில் வழங்கப்பட்ட பட்டாவில் 89 ச.மீ அளவுள்ள சொத்துக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.2 ஆவணத்தில் கண்டுள்ள அளவுகளின் படி நிலம் வேண்டும் என்று வாதிகளுடன் பிரச்சினை செய்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். கிரைய ஆவணத்தின்படி மட்டும்தான் உரிமை கோர முடியும் என்றும், தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ள பட்டா அளவுகளின் படி என்னால் உரிமை கோர இயலாது என்று

சொன்னால் சரியல்ல. வாதிகள் அவர்கள் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தின் அடிப்படையில் அளவுகளுக்கு உட்பட்டு தான் கட்டுமானம் கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

3) என்னுடைய தகப்பனார் சொத்தினை கிரையம் வாங்கும் பொழுது நிலமானது விவசாய நிலமாக வகைப்படுத்தப்பட்டிருந்தது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. என்னுடைய தகப்பனார் மற்றும் வாதிகள் கிரையம் வாங்கிய சொத்துக்களுக்கு எப்பொழுது நிலம் நத்தம் குடியிருப்பு பகுதியாக வகைப்பாடு மாற்றப்பட்டது என்றும் பாதை எப்பொழுது ஒதுக்கப்பட்டது என்றும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்துக்கும் வாதிகள் கிரையம் வாங்கிய சொத்துக்கும் நடுவே பாதை இருப்பதாக என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்று சொன்னால் சரிதான். 2 கிரைய ஆவணங்களின் அடிப்படையில் கிரையம் வாங்கிய சொத்துகளுக்கு நடுவே நடைபாதை உள்ளது என்றும் அந்த நடைபாதையை நான் தான் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

4) உண்மையான அளவுகளுக்கு மாறுபட்டு தவறுதலாக கூடுதல் அளவுகளுடன் எனக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், பூமியில் உள்ள பாதையை நான் தான் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் அவர்கள் கிரையம் பெற்ற ஆவணத்தில் கண்டுள்ள அளவுகளுக்கு உட்பட்டு கட்டுமானம் கட்டியுள்ளதால் வாதிகள் கேட்டுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்க கூடியது என்று சொன்னால் சரியல்ல. நத்தம் நிலவரித் திட்டத்தின் பொழுது தவறுதலாக பாதையானது வாதிகளுக்கு சொந்தமான நிலத்தில் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி வரைபடமானது திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. மாவட்ட சார்பு ஆட்சியர் அவர்கள் பாதையில் வாதிகளால் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லக்கூடிய ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி உத்தரவு பிறப்பித்திருந்த போதிலும், செயல் அலுவலர் எங்களுடைய வரைபடத்தின் அடிப்படையில் பாதையானது தவறுதலாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், வாதிகள் பாதையில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்று ஆக்கிரமிப்பை அகற்ற முடியாது என்று பதில் அனுப்பினார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு செயல் அலுவலர் அனுப்பிய பதில் வரவில்லை.

5) செயல் அலுவலர் பதிலை எனக்கும் சேர்த்து தான் அனுப்பினார் என்றும், அதை நான் பெற்றுக் கொண்டேன் என்றும், தற்பொழுது வழக்குக்காக எனக்கு அனுப்பவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 3 மற்றும் 4 ஆவணங்கள் இந்த வழக்குக்கு தொடர்பற்ற ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. தவறான அளவுகள் காண்பிக்கப்பட்டுள்ளதால் அந்த ஆவணங்கள் செல்லக்கூடிய ஆவணங்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதிகளின் வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்க கூடியது என்று சொன்னால் சரியல்ல.

3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

வத்திராயிருப்பு